**ஜனவரி - 5**

**"உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது." - ரோம 15:3**

கிறிஸ்து நிந்தைகளை சுமந்ததுபோல, நாமும் அவருடைய நிந்தைகளை சுமக்க ஜாக்கிரதையாக இருப்போமாக. அப்படி சுமக்கும்போது, தவறு செய்கிறவர்களுக்காகவும், சீரழிந்திருக்கிறவர்களுக்காகவும் இரக்கம் காட்டவும், அவர்களுக்காக ஜெபம் செய்யவும் வேண்டும். ஒருவேளை தேவன் அவர்களுக்கு மன்னிப்பை அருளுவார். தாழ்மையோடு கூடிய தைரியத்தோடும் நிந்தைகளை சுமந்து அவருடைய ஊழியத்தில் நல்ல போர் வீரராக கடினத்தை சகித்து, கர்த்தருக்குள்ள நம்முடைய பக்தியை நிரூபிப்பதை ஒரு சிலாக்கியமாக மதிக்க வேண்டும். மனுஷரின் சீரழிந்த நிலையின் காட்சியைக் கண்டு அவர் ஆச்சரியப்படவில்லை. பாவத்தினால் கட்டப்பட்டிருக்கிற அன்பில்லாத உலகில் அந்தக்காரப் பிரபுவின் ராஜ்ஜியத்திற்கடியில் தான் இருந்ததை அறிந்திருந்தார். ஆகையால், நிந்தைகளையும், அடிக்கடி துன்பப்படுதலையும் எதிர்பார்த்திருந்தார். இவைகள் எல்லாவற்றையும் அவர் பொறுமையுடன் சகித்தார். அதே சமயத்தில், தன் சொந்தப் பாடுகளில் சிரத்தை கொள்ளாமல் அவருடைய அன்புள்ள இருதயம் மற்றவர்களுக்காக இரக்கத்தையும் அன்புள்ள அக்கறையும் கொண்டிருந்தது.

**- Z ’96, 83 (R 1963).**

எதிராளியின் ஏமாற்றத்தினால் நம்முடைய பரமபிதாவினுடைய குணம் திரித்துக் கூறப்படுதலினாலும், மனுஷரின் பாவ நிலையினாலும், அறியாமையினாலும் அவர்கள் அவருடைய நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறதினாலும், தேவ பக்தியில்லாதவர்கள் அவரை நிந்திக்கச் செய்கின்றனர். அவருடைய உண்மையுள்ள ஜனங்களாக அவரை ஆதரிக்கிறவர்கள் அவர் நிமித்தமாக அவருக்கு ஆதரவு காட்டுகிறதினால், அதே ஜனங்களிடமிருந்து ஆனால் அவசியமாகவும், வழக்கமாகவும் அதே காரியங்களுக்காக அல்லாமல், நிந்தையை சுமக்கிறார்கள். **-P ’32, 197.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 69:9; மாற் 12:35-40; லூக் 12:50; ரோம 6:1-11; 8:10,17,18; 15:2,3; 1கொரி 15:29-34; 2கொரி 1:5; 4:8-5:9; கலா 2:20; பிலி 3:10; கொலோ 1:24;2:11,12; 2தீமோ 2:10-12; 1பேது 2:19-24; 3:13-18; 4:12-19.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 323 (R 5116).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டன? அவை என்னில் எவ்விதம் கிரியை செய்தன?**